1987 ஏப்ரல் 22] [திரு. க. சோலைராசு]

தீர்ப்பு வருவதற்கு இடையில் அந்த சாயப் பட்டறைகளை நிறுத்திவைக்க அரசு உத்தரவிடுமா? திருச்சி மாநகரில் இதைப் போன்று சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவு நீரை பரிசோதனை செய்து பார்ப்பதற்கு ஆய்வுக்கூடம் இல்லை. ஆகவே, திருச்சி மாவட்டத்தில் இதுசம்பந்தமாக ஒரு ஆய்வுக் கூடத்தை நிறுவ மாண்புமிகு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன தகவல்கள் அரசுக்குத் தெரியும். மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிறு, சிறு யூனிட்டுகளாக இருப்பதால் ஒவ்வொன்றும் தனித்தனியாக கழிவுநீரை சுத்திகரிப்பு செய்வதற்கு சாத்தியக்கூறு இருக்கிறதா என்று தெரியவில்லை. சிறிய அளவில் இயந்திரங்களை வைத்து கழிவுநீரை சுத்திகரிப்புச் செய்கின்ற சாத்தியக்கூறு இருக்கிறதா என்று ஆராயச் சொல்லி மாசு கட்டுப்பாடு வாரியத்தை அரசு கேட்டிருக்கிறது.

அடுத்து, திருச்சியிலே மாசு கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் ஆராய்ச்சிக் கூடம் ஒன்று அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். இப்போது அதுபற்றிய பரிசீலனை இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

(இ) மார்த்தாண்டம் மேல்நிலைப்பள்ளியில் சில மாணவர்களுக்கு தேர்வு எழுத அனுமதியின்மை.

திரு. வை. பாலச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை கல்வி மாவட்டத்திற்குட்பட்ட மார்த்தாண்டம் அரசு மேல் நிலைப் பள்ளியில் 1985-86 ஆம் கல்வி ஆண்டிலிருந்து ஆசிரியர் பயிற்சி (டி.டி.சி) வகுப்பில் படித்துவரும் மொத்தம் 17 மாணவர்களும் தேர்வு எழுத அனுமதி வழங்கப்படாததால் அம்மாணவர்களும் பெற்றோர்களும் அடைந்துள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

மார்த்தாண்டம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 1985-86 ஆம் கல்வியாண்டில் பள்ளிக் கல்வி இயக்குநரின் முன் அனுமதியின்றி தலைமை ஆசிரியரே 24—10—1985 முதல் "இடைநிலை ஆசிரியர் பயிற்சி" வகுப்பினை தொழிற் பாடப் பிரிவின் கீழ் தொடங்கியமைக்கு அப்பயிற்சியில் சேர்க்கப்பட்ட மாணவர்கள் நலன் கருதி தலைமை ஆசிரியரின் செயலுக்கு அரசு ஆணை எண் 448, கல்வி, நாள் 19—3—1987-ல் பின்னேற்பு அளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. வை. பாலச்சந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கோரிக்கையை ஏற்று கனிவோடு பரிசீலனை செய்து அந்த மாணவர்கள் தேர்வு எழுத ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் முன்னனுமதி இல்லாமல் இப்படி இடைநிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புக்கு மாணவர்களைச் சேர்க்கின்ற நிலைமை கன்னியாகுமரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் இருக்கிறது. அதைத் தடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு அதை ஆய்ந்து வருகிறது.

(ஈ) திருமங்கலம் தொகுதி எம். போத்தநதிக்கருகில் பாலம் செப்பனிடுதல்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் உள்ள எம். போத்தநதிக்கு அருகில் உள்ள பாலம் உடைந்து பல மாதங்கள் ஆகியும் அது திரும்பக் கட்டப்படாததால் பஸ் மற்றும் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருப்பதால் அப்பகுதியில் வாழும் 50,000-க்கு மேற்பட்ட மக்கள் பாதிக்கப்படுவது குறித்த"